சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 9882 /அ7/2024 நாள். .12.2024

பொருள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் "குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலைத் தடுத்தல்" என்ற தலைப்பில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கையேடு தயாரித்தமை - தொடர்பாக.

பார்வை சென்னை-06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறை ந.க.எண். 6140/SCERT/2024-F3 நாள். 10.12.2024.

……………….

பார்வையில் காண் கடிதத்தின்படி, ஆன்லைன் வகுப்புகளில் போது மாணவர்களின் பாதுகாப்பு குறித்தும், பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாத்தல் குறித்த வழிகாட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் பாதுகாப்பு சார்ந்த செயல்பாடுகள் நடைபெற்றுவருகிறது.

இந்த ஆண்டு 26.11.2024 அன்று பள்ளிக்கல்வித் துறை செயலர் அவர்களது தலைமையில், "குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலைத் தடுத்தல்" என்ற தலைப்பில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கையேடு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

மேலும் இக்கையேட்டினை ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் http://tnschools.gov.in என்னும் இணையதளத்தில் பதிவேற்றம் மேற்கொள்ளப்பட்டது. கொடுக்கப்பட்டுள்ள இணையதளத்தில் இருந்து ஒவ்வொரு பள்ளியும் கையேட்டினை பதிவிறக்கம் செய்து நகல் எடுத்து பயன்படுத்திக் கொள்ளுமாறு தக்க அறிவுரைகளை அனைத்து தலைமையாசிரியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்

18/12/24 சென்னை

பெறுநர்

1. மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை) சென்னை மாவட்டம்.
2. சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

சென்னை-06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் , இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிவுடன் அனுப்பலாகிறது.

Scanned with OKEN Scanner